**செய்தி வெளியீடு எண்: 051** **நாள்: 18.01.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

## பொங்கல் விடுமுறை – 2018

## தமிழ்நாடு காவல்துறை போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

நடந்து முடிந்த பொங்கல் கொண்டாட்ட விடுமுறையின் போது, தமிழகமெங்கும் காவல்துறையால் கடைப்பிடிக்கப்பட்ட, திட்டமிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகன வழக்குகள் மற்றும் துரித போக்குவரத்து சீர்படுத்துதல் வாயிலாக, இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட சாலை விபத்துக்கள் மற்றும் சாலை விபத்து மரணங்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

போகிப்பண்டிகை, பொங்கல் தினம், திருவள்ளுவர் தினம் மற்றும் உழவர் தினத்தில் சாலை விபத்துக்களை குறைக்கும் முகமாக, பல்வேறு மோட்டார் வாகன சட்டப் பிரிவுகளின் கீழ் (அதிக வேகம், சரக்கு வாகனத்தில் அளவுக்கதிகமான சுமை ஏற்றிச்செல்லல், சரக்கு வாகனத்தில் பயணிகள் ஏற்றிச்செல்லல், வாகனம் ஓட்டும் போது அலைபேசி உபயோகித்தல், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் சிவப்பு விளக்கை மதியாமை) **2017–ல்** பதியப்பட்ட வழக்குகள் முறையே **2,211, 2,212, 2,211** மற்றும் **2,212. 2018–ல்** பதியப்பட்ட வழக்குகள் முறையே **8,077, 6,475, 7,090** மற்றும் **6,254.** கடந்த ஆண்டைவிட சுமார் **265.31**%, 192.72%, 220.67% மற்றும் 182.73% அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தலைக்கவசம் அணியாமை மற்றும் இருக்கைப்பட்டி அணியாமைக்கு **2017–ல்** மேற்சொன்ன தினங்களில் பதியப்பட்ட வழக்குகள் முறையே **8,635, 8,635, 8,635** மற்றும் **8,634. 2018–ல் 23,151, 18,230, 15,874** மற்றும் **18,516.** கடந்த ஆண்டை விட **168.11**%, 111.12%, 83.83% மற்றும் 114,45% அதிகமான வழக்குகள் பதியப் பட்டுள்ளது.

போக்குவரத்து மட்டுமின்றி, சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பிலும் தமிழக காவல்துறையால் மேற்கொள்ளப்பட்ட முறையான திட்டமிடல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் துரித செயல்பாடுகளால், **108** சாலை விபத்து சேவை அழைப்புகள் வெகுவாகக் குறைந்துள்ளது. போகி

முதல் உழவர் தினம் வரை 2017/2018–ல் பெறப்பட்ட அழைப்புகள் பின்வருமாறு 23,675/15,585, 23,573/16,768, 23,220/15,825 மற்றும் 23,139/18,138. தினமும் சுமார் 5000–8000 அழைப்புகள் குறைந்துள்ளது.

மேற்சொன்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், 108 சேவை எண்ணில் பெறப்பட்ட சாலை விபத்து தொடர்பான அழைப்புகளின் எண்ணிக்கை, போகிப் பண்டிகை முதல் உழவர்தினம் வரை 2017–ல் முறையே 962, 1,225, 770 மற்றும் 946 அழைப்புகளும், 2018–ல் 800, 1,058, 671 மற்றும் 957 அழைப்புகளும் பெறப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது.

இந்த ஆண்டு பொங்கல் விடுமுறையின் போது, கடந்த ஆண்டை விட சாலை விபத்துகளைக் குறைப்பதில் மிகவும் சிறப்பாக பணியாற்றி, பங்களிப்பை அளித்த சென்னை மாநகர காவல் ஆணையாளர் (–37) மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், காஞ்சிபுரம் (–53), திருவண்ணாமலை (–42), திருநெல்வேலி (–42), மதுரை (–40), விழுப்புரம் (–33), திண்டுக்கல் (–32), புதுக்கோட்டை (–31), விருதுநகர் (–29), தூத்துக்குடி (–27), சிவகங்கை (–23), சேலம் (–20), இராமநாதபுரம் (–18), பெரம்பலூர் (–14), தஞ்சாவூர் (–13) ஆகியோரை காவல்துறை தலைமை இயக்குநர் வெகுவாக பாராட்டினார்.

காவல் துறையின் திட்டமிட்ட போக்குவரத்து சட்ட அமலாக்கம், துரித அவசர ஊர்தி சேவை மற்றும் உரிமம் தொடர்பான கடுமையான தண்டனை நடவடிக்கைகள் வாயிலாக, பொதுமக்கள் பலரின் விலைமதிப்பில்லாத உயிரிழப்பு தவிர்க்கபட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**